ප්‍රවෘත්ති නිවේදනය | ஊடக வெளியீடு PRESS RELEASE

කාන්තා සහ ළමා කටයුතු අමාත්‍යාංශය மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

Ministry of Women and Child Affairs

06th Floor, Stage II, Sethsiripaya, Battaramulla
Tel: Office: 011- 2186145 (118) / Fax: 011-2187154 /Email :mwcamo9@gmail.com

16.11.2026

செய்திப் பணிப்பாளர் / செய்தி ஆசிரியர்,

உங்களது ஊடகத்தளங்களினூடாக பின்வரும் செய்தியினை பரந்தளவில் மக்கள் மத்தியில் கொண்டுசேர்க்கவும்.

இலங்கையில் முதன்முறையாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை ஆகியன பிரெய்லி (Braille) வடிவில் வெளியிடப்படவுள்ளன

இலங்கையில் முதன்முறையாக, 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தையும் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையையும் பிரெய்லி (Braille) முறையில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டமானது, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பங்கு மற்றும் பொறுப்புகள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை போன்றவை பற்றிய அடிப்படை அறிவைப் பார்வைசார் சவால்களை எதிர்கொள்ளும் சிறுவர்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கும்.

அனைத்துச் சிறுவர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதும், விதிவிலக்கின்றி ஒவ்வொரு சிறுவர்களுக்கும் அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்கள் ஊடாக சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவு மற்றும் தகவல்களை சமமாக அணுகுவதற்கான வாய்ப்பை வழங்குவதும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் முக்கிய நோக்கமாகும்.

ஊடகப் பிரிவு

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு